# தமிழ் நாடு அரசு

## சுருக்கம்

அலுவலக நடைமுறை—தமிழ்நாடு அரசு அலுவலக வேலை நாட்கள் — மீண்டும் மாற்றி அமைத்து ஆணை வெளியிடப்படுகிறது.

பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (பணியாளர்—எ) துறை.

அரசாணை நிலை எண். 67

நாள் 8.2.1990

**படிக்கப்பட்டவை**

1. அரசு ஆணை நிலை எண்.550 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (பணி—எ) துறை நாள் 28.5.85.
2. அரசு ஆணை நிலை எண்.342 பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் (பணி—எ) துறை நாள் 15.6.'89.

....

ஆணை:

பார்வை 1—ல் குறிப்பிட்ட அரசாணையில் அரசு அலுவலகங்களில் வாரம் 5 நாட்கள் பணி முறை செயலுக்கு கொண்டு வரப்பட்டு எல்லா அரசு அலுவலகங்களிலும் சனிக் கிழமைகளும் ஞாயிற்றுக் கிழமைகளும் விடுமுறை நாட்களாக கருதப்பட ஆணை வெளியிடப்பட்டது. அதன்படி அலுவலக நேரம் காலை 9.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை மற்றும் காலை 10.00 மணி முதல் மாலை 5.30 மணி வரை என நிர்ணயிக்கப்பட்டது.

2. பார்வை—2ல் கண்ட அரசாணையில் ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரையினை ஏற்று 1.7.89 முதல் மீண்டும் வாரத்தில் 6 நாட்கள் பணி முறை செயலுக்கு கொண்டுவரப்பட்டு, இரண்டாவது சனிக் கிழமை மற்றும் எல்லா ஞாயிற்றுக் கிழமைகள் தவிர மற்ற எல்லா சனிக் கிழமைகளும் வேலை நாட்களாக மாற்றி ஆணை வெளியிடப்பட்டது. ஆனால் வேலை நேரத்தில் யாதொரு மாற்றமும் செய்யப்படவில்லை.

3. அரசு அலுவலகங்களில் பணி நேரத்தினை ½மணி நேரம் கூடுதலாக்கி மீண்டும் வாரத்தில் 5 நாட்கள் வேலை நாட்கள் என அறிவிக்குமாறு பல்வேறு பணியாளர் சங்கங்கள் கோரிக்கை விடுத்தன. அக்கோரிக்கையினை தீவிர பரிசீலனைக்குப்பிறகு அரசு ஏற்றுக் கொண்டது.

/-

4. அதன்படி அரசு அலுவலகங்களில் தற்போதுள்ள பணி நேரத்தினை நாள்தோறும் ½ மணி நேரம் கூடுதலாக்கி அரசு பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோருக்கு மீண்டும் வாரத்தில் 5 நாட்கள் வேலை நாட்களாக அதாவது எல்லா சனிக் கிழமைகளும் ஞாயிற்றுக் கிழமைகளும் விடுமுறை நாட்களாக அறிவித்து அரசு ஆணை வெளியிடுகிறது. தவிர எல்லா அரசு அலுவலகங்களுக்கும் 12.2.90 முதல் பணி நேரம் காலை 9.45 முதல் மாலை 5.45 வரை என மாற்றி அமைத்தும் ஆணை வெளியிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எம். எம். இராஜேந்திரன்
அரசு தலைமைச் செயலாளர்.

<u>பெறுநர்:-</u>

அனைத்து செயலகத் துறைகள், சென்னை-9.
அனைத்து தலைமைத் துறைகள், ~~சென்னை-9.~~
அனைத்து மாவட்ட ஆட்சியர்.
அனைத்து மாவட்ட நீதிபதிகள்.
குற்றவியல் நீதிபதிகள்.
பதிவாளர், உயர் நீதிமன்றம், சென்னை-104.
செயலாளர், தமிழ்நாடு அரசு தேர்வாணைக் குழு, சென்னை-2.
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை-3.
சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை-5.
காவல் துறை ஆணையர், சென்னை-8.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு, தெற்கு, கிழக்கு) சென்னை.
அனைத்து தமிழ் நாடு அரசு நிறுவனங்கள்/வாரியங்கள்.
மாநில கணக்காயர், சென்னை-18/சென்னை-9/சென்னை-35.

<u>நகல்:-</u>

இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு, சென்னை-9.
செயலாளர், போக்குவரத்துத் துறை, சென்னை-9.
அனைத்து அரசுச் செயலாளர்கள், சென்னை-9.

ஆணைப்படி/அனுப்பப்படுகிறது

பிரிவு அலுவலர்.